**நியாகம பிரதேச சபை - 2023**

---------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நியாகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நியாகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது கட்டிடங்கள் அபிவிருத்தி செய்வதற்காக மற்றும் உபகரணங்களுக்காக மேற்கொண்டிருந்த பெறுமதிகள் முறையே ரூபா 39,939,033 தொகை மற்றும் ரூபா 650,800 தொகை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளின் போது அறவீடு செய்யப்பட்டிருந்த ரூபா 10,249,549 இற்கான ஒரே முறையில் பெறும் பணம் | - மேற்படி - | வைப்புக்களிலிருந்து அகற்றி வருமானத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்திற்கு சீராக்கள் மேற்கொள்ளாமல் செலுத்த வேண்டிய வைப்பு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிர்மாணவேலை கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 53,718 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 126,630 இற்கான நூலகப் புத்தகங்களை மூலதனப்படுத்தாமையை சரி செய்யும் போது கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைத்திருந்தமையால் கடன்கொடுத்தோர் மற்றும் நூலகப் புத்தகக் கணக்கு அந்தத் தொகையினால் குறைந்திருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | முன்னைய ஆண்டின் போது ஊழியர் கடன் கணக்கிற்கு மற்றும் முற்பணக் கணக்கிற்கு மேலதிகமாக வரவு வைக்கப்பட்டிருந்த முறையே ரூபா 109,158 மற்றும் ரூபா 30,700 தொகை சரி செய்வதற்காக திரண்ட நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையால் அந்தக் கணக்கு மேற்கூறிய பெறுமதியினால் குறைந்திருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | ஒன்றிற்கு ஒன்று சமமாக இருக்க வேண்டிய நிலையான சொத்துக்கள் மீதி மற்றும் மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை மீதி இடையே ரூபா 145,654 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | - மேற்படி - | இந்த இரண்டு கணக்குகளும் ஒன்றிற்கு ஒன்று சமமாக இருக்க வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள 14 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 59,135,679 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 24 | 2018 ஆண்டின் பின்னர் ரூபா 19,947,965 இற்கான செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த 4764 கிலோமீற்றர்களை உடைய 36 பாதைகளை பாதைப் பதிவேட்டில் உட்படுத்தி வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 104 | 2023 ஆண்டின் போது 04 வாகனங்கள் தொடர்பாக ஏற்பட்டிருந்த நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.7.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டின் போது செயலாளரினால் தொகுதிப் போக்குவரத்து வசதிகளின்றி ஒரு நாளைக்கு வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் இடையே பிரயாணம் செய்வதற்காக சபையின் வாகனத்தை பயன்படுத்துவதற்காக அதன் எரிபொருளுக்காக ரூபா 295,547 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அவசர அனர்த்த சந்தர்ப்பங்களில் விரைவாக பதில் அளிப்பதற்காக சபையின் வாகனம் சபையினுள் காணப்பட வேண்டியிருந்தது என. | கிரயம் குறையுமாறு செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 7,560,476 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 422,422தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 2,781,827 | 1,244,968 | 1,490,497 | 658,789 | 2,526,723 | 1,414,293 | 1,502,138 | 904,318 |
| வாடகை | 7,417,640 | 5,424,993 | 5,088,465 | 754,839 | 6,219,950 | 4,642,500 | 4,643,741 | 600,311 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 410,6000 | 315,743 | 332,560 | - | 496,400 | 238,767 | 246,017 | 16,817 |
| ஏனைய வருமானங்கள் | 6,403,000 | 6,342,408 | 6,342,408 | - | 3,404,000 | 7,174,259 | 1,174,259 | - |
| | 17,013,067 | 13,146,112 | 13,253,930 | 1,413,628 | 12,647,073 | 13,469,819 | 13,566,155 | 1,521,446 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை மொத்த வருமானம் ரூபா 1,521,446 தொகையாக காணப்பட்டதுடன் அது இறுதியில் உள்ளவாறு ரூபா 1,413,628 தொகையாக இருந்தது. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்யும் முன்னேற்றத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் உப பிரிவு 134(1) இற்கு இணங்க தல்கஸ்வல உட்பட முன்னேற்றப்பட்ட கிராமப் பிரதேசங்களில் இருந்து வீதவரியை அறவீடு செய்வதற்காக பிரதேச சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என. | பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | வீதவரி பெறுமதி மதிப்பீடு 2014 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் புதிய பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளாமையால் சபைக்கு | 2024 ஆண்டிலிருந்து புதிய பெறுமதி மதிப்பீட்டின் கீழ் வீதவரி அறவிடப்படும் என. | புதிய பெறுமதி மதிப்பீட்டின் கீழ் வீதவரி அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உழைக்கக் கூடியதாக இருந்த வருமானத்தை இழத்தல் ஒன்று நேரிட்டிருந்தது. | | |
| (ஈ) | சபைக்கு சொந்தமான கடையறை ஒன்று 2015 ஆண்டிலிருந்து வாடகைக்கு கொடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்டதால் ரூபா 388,850 இற்கான தொகையொன்றினை இழந்திருந்தது. | கடையறையை வாடகைக்கு கொடுப்பதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | கடையறைகளை வாடகைக்கு கொடுத்து வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 29 விளம்பர அறிவித்தல் பலகைகள் தொடர்பாக ரூபா 333,600 தொகையான கட்டணமொன்று அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 357,250 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,194,757 தொகை காணப்பட்டது. | பிரதான செயலாளர் அலுவலகத்தினால் அறிமுகப்படுத்தியிருந்த அறிவுரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைத் தொகையை தருவித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 17 ஏக்கர் 03 ரூட் 18.93 பர்சஸ் தொகைக்கான 25 காணிகளின் உரிமையை முறைப் பிரகாரம் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதேச செயலகத்தினால் காணிகளை உரித்தாக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபையினால் அனுபவித்து வரும் மற்றும் பயன்படுத்திவரும் 03 காணிகளின் 271 பர்சஸ் அளவு போலவே ரூபா 52,400,000 பெறுமதியான மற்றும் 413 சதுரமீற்றர் அளவான 03 கட்டிடங்கள் ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கை ஒன்றிற்காக பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | ஆக்கபூர்வமான அலுவல்களுக்காக எதிர்காலத்தில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்கு சொந்தமான ஆதனங்கள் ஆக்கபூர்வமான அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பயன்படுத்தப்பட்டு வரும் கிரயத்தை இனங்காண முடியாத 05 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் சபையின் பெயரில் பதிவு செய்து கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபையின் பெயரில் பதிவு செய்து கொள்வதற்கு மற்றும் கிரயத்தை இனங்காண்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபையின் பெயரில் பதிவு செய்து கிரயத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை கட்டிடம் நிர்மாணித்தல் தொடர்பாக குறிப்பிட்ட ரேட்கள் பயன்படுத்தாமையால் ரூபா 553,855 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | தேவையான பில்பத்திரங்கள் கொடுப்பனவின் போது பிரதான பொறியியலாளரின் அறிவுரையை பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |